வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: சரவணகுமார்

நாள்: 20.11.2024 நேரம்: மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை, கயானா தலைநகர் ஜார்ஜ்டவுனில், அந்நாட்டின் அதிபர் டாக்டர் முகமது இர்ஃபான் அலியை சந்தித்து பேசுகிறார்.

இந்தியாவின் படைப்புத் திறன்சார் பொருளாதாரம், 30 பில்லியன் டாலர் தொழிலாக வளர்ச்சி அடைந்து இருப்பதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடருக்கு முன்பாக, மத்திய அரசு வரும் 24ஆம் தேதி, அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றை நடத்த உள்ளது.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், இன்று, பெத்து செட்டிபேட் சித்தி விநாயகர் – சிவசுப்ரமணியர் கோவிலில், தங்கத் தேர் செய்யும் பணிகளை தொடக்கி வைத்தார்.

---

மோடி-க□ானா 1 (18)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை, கயானா தலைநகர் ஜார்ஜ்டவுனில், அந்நாட்டின் அதிபர் டாக்டர் முகமது இர்ஃபான் அலியை சந்தித்து பேசுகிறார். இப்பேச்சு வார்த்தைகளை தொடர்ந்து, பல்வேறு உடன்பாடுகளும் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப் படுகிறது. 3 நாடுகள் பயணத்தின் இறுதிகட்டமாக பிரதமர் இன்று காலை, கயானா சென்றடைந்தார். முன் எப்போதும் இல்லாத வகையில், கயானா அதிபர், பிரதமர் மற்றும் 10க்கும் மேற்பட்ட அமைச்சர்கள், விமான நிலையத்திற்கு நேரில் வந்து, பிரதமர் திரு. நரேந்திர மோடியை வரவேற்றனர். சம்பிரதான முறையிலும், பிரமருக்கு வரவேற்பு அளிக்கப் பட்டது. இந்திய பிரதமர் ஒருவர் கயானா செல்வது, கடந்த 56 ஆண்டுகளில், இதுவே முதல்முறையாகும். கயானாவில் இன்று, 2ஆவது கேரிக்காம்-இந்தியா உச்சி மாநாட்டில், பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்கிறார். கேரிக்காம் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த நாடுகளின் தலைவர்களையும் அவர் சந்திக்கிறார். நாளைய தினம், கயானா நாடாளுமன்றத்தில், பிரதமர் திரு. நரேந்திர மோடி உரையாற்ற இருக்கிறார். கயானா, மற்றும் கரீபியன் பிராந்தியத்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களையும்,

அவர் சந்தித்து கலந்துரையாடுவார். இப்பயணத்தின் போது, கயானாவின் மிக உயரிய தேசிய விருதான, **ஆர்டர் ஆஃப் எக்ஸலன்ஸ்** விருது, பிரதமர் திரு. நரேந்திர

மோடி-க□ானா 2 (9)

மோடிக்கு வழங்கப்பட உள்ளது. பார்படோஸ் அரசும், **பார்படோஸ் சுதந்திரத்தின் கவுரவ ஆர்டர்** விருதை, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்குகிறது.

இந்தியாவிற்கும், கயானா நாட்டிற்கும் இடையே, சுகாதாரம், தகவல் தொடர்பு, புதுப்பிக்கவல்ல எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் நீண்டுகால கூட்டாண்மை இருப்பதும், இவ்வாண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற வெளிநாடு வாழ் இந்தியர் தின விழாவில், கயானா அதிபர் டாக்டர் இர்ஃபான் அலி, தலைமை விருந்தினராக கலந்து கொண்டதை தொடர்ந்து, இருநாடுகளுக்கும் இடையிலான உயர்நிலை தொடர்புகள், அண்மைக் காலமாக அதிகரித்து வருவதும், குறிப்பிடத்தக்கது.

---------------------------

*ராஜ்நாத்-லாவோஸ் (12)*

பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், 3 நாள் பயணமாக இன்று, லாவோஸ் நாட்டிற்கு புறப்பட்டு சென்றுள்ளார். இப்பயணத்தின் போது, ஆசியான் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுக்கு இடையிலான, ADMM-Plus கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு, பிராந்திய, மற்றும், சர்வதேச அளவிலான பாதுகாப்பு பிரச்சனைகள் குறித்து உரையாற்றுவார். இந்தோனேஷியா, மலேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், லாவோஸ் உள்ளிட்ட நாடுகள் அடங்கிய ஆசியான் கூட்டமைப்பில், இந்தியா, சீனா, ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட 8 நாடுகள், பேச்சு வார்த்தைக்கான கூட்டாளி நாடுகளாக இடம்பெற்றுள்ளன. இதில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்பு அமைச்சர்களை திரு. ராஜ்நாத் சிங், இருதரப்பு ரீதியிலும் சந்தித்து, பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து, பேசுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

---------------------------

தேர்தல் (11)

மஹாராஷ்ட்ரா மாநிலத்தில் ஒரே கட்டமாகவும், ஜார்கண்டில், 2ஆவது மற்றும் இறுதி கட்டமாகவும், சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு இடையே இன்று நடைபெற்றது. ஜார்கண்டில், தேர்தல் நடைபெறும் 38 சட்டமன்றத் தொகுதிகளில், பிற்பகல் 3 மணி நிலவரப்படி, 61.47 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன. மஹாராஷ்ட்ர மாநிலத்தில், பிற்பகல் 3 மணி வரை, 45.53 சதவிகித வாக்காளர்கள், தங்களின் வாக்குகளை பதிவு செய்து இருந்தனர். இது அல்லாது, 4 மாநிலங்களுக்கு உட்பட்ட,15 சட்டமன்றத் தொகுதிகள், மற்றும், மஹாராஷ்ட்ர மாநிலம் நாந்தேத் மக்களவைத்

தொகுதியில், இடைத் தேர்தல் வாக்குப்பதிவும் இன்று நடைபெற்றது. இறுதி வாக்குப்பதிவு சதவிகிதம் பற்றிய விவரங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.

---------------------------

*திரைப்பட விழா (10)*

55ஆவது சர்வதேச திரைப்பட விழா, கோவாவில் இன்று மாலை கோலாகலமாக தொடங்குகிறது. மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் உள்ளிட்டோர் தொடக்க விழாவில், பங்கேற்றுள்ளனர். வரும் 28ஆம் தேதி வரை நடைபெற உள்ள, இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், 81 நாடுகளில் தயாரிக்கப்பட்ட 180 சர்வதேச திரைப்படங்கள் திரையிடப் படுகின்றன. இவ்வாண்டு திரைப்பட விழாவில், ஆஸ்திரேலிய திரைப்படங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுவதன் ஒருபகுதியாக, தொடக்க விழாவில், ஆஸ்திரேலிய இயக்குநர் **மைக்கேல் கிரேசி-ன்** Better Man திரைப்படம், திரையிடப் படுகிறது.

---------------------------

*அஷ்வினி வைஷ்ணவ் (20)*

இந்தியாவின் படைப்புத் திறன்சார் பொருளாதாரம், 30 பில்லியன் டாலர் தொழிலாக வளர்ச்சி அடைந்து இருப்பதாகவும், இது, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், 2.5 சதவிகிதம் என்றும், மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். நாட்டின் மொத்த தொழிலாளர் சக்தியில், 8 சதவிகிதம் பேர், இத்துறை மூலம் வாழ்வாதாரம் பெறுவதாக, இன்று ஆங்கில, மற்றும் ஹிந்தி நாளேடுகளில் வெளியிட்டுள்ள கட்டுரையில் அவர் தெரிவித்துள்ளார். படைப்புத் திறன்சார் தொழில் துறையில், திறன் மேம்பாடு, உள்கட்டமைப்பு, மற்றும், படைப்பாளிகளின் அதிகார மேம்பாட்டிற்கு அரசு முன்னுரிமை அளிப்பதாகவும், இந்தியப் படைப்புத் திறன்சார் பல்கலைக்கழகம், தனியாக தொடக்கப் பட்டதே இதற்கு சான்றாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கோவாவில் இன்று தொடங்கும் 55ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், நூற்றுக்கணக்கான திரைப்படங்கள் இடம்பெறுவதையும் உலக அளவிலான திரைத் துறை பிரபலங்கள் இவ்விழாவில் பங்கேற்பதையும், அமைச்சர் சுட்டிக் காட்டினார். ஊடகங்களின் உள்ளடக்கத் தேவைகளை பூர்த்தி செய்வதில், உலக சக்தியாக இந்தியாவை மேம்படுத்தும் முயற்சிகளில், WAVES என்னும் உலக ஒலி-ஒளி, மற்றும், கேளிக்கைத் துறை உச்சி மாநாடு, முக்கிய மைல் கல்லாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---------------------------

*அனைத்து கட்சி (9)*

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடருக்கு முன்பாக, மத்திய அரசு வரும் 24ஆம் தேதி, அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றை நடத்த உள்ளது. பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், இக்கூட்டத்திற்கு தலைமையேற்கிறார்.

நாடாளுமன்ற இரு அவைகளிலும், அலுவல்கள் சுமூகமான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதில், அனைத்து கட்சிகளின் ஆதரவை, அரசு இக்கூட்டத்தில் நாடும். நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத் தொடர், வரும் 25ஆம் தேதி தொடங்கி, டிசம்பர 20ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. அரசியல் சாசன தினமான வரும் 26ஆம் தேதி, நாடாளுமன்ற அமர்வு இராது என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

---------------------------

*ராணுவம்-நேபாள் (7)*

இந்திய ராணுவத்தின் தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர துவிவேதி, 4 நாள் பயணமாக இன்று நேபாள் சென்றுள்ளார். இருநாட்டு ராணுவங்களுக்கு இடையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான புதிய வாய்ப்புகளை ஆராய, இப்பயணத்தின் போது முக்கியத்துவம் அளிக்கப்படும். நேபாள அதிபர் திரு. ராமச்சந்திர பவுதேல், நேபாள ராணுவத்தின் தலைமை தளபதி என்னும் கவுரவ அந்தஸ்தை, ஜெனரல் துவிவேதிக்கு வழங்க இருக்கிறார்.

---------------------------

*கள்ளக்குறிச்சி* (11)

கள்ளக்குறிச்சி கருணாபுரம் பகுதியில், விஷச்சாராய சம்பவத்தில் பல உயிர்கள் பலியானது குறித்த வழக்கை,சிபிஐ விசாரணைக்கு மாற்றி, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதுதொடர்பாக, அஇஅதிமுக, பிஜேபி உள்ளிட்ட கட்சிகள் தாக்கல் செய்த, பொதுநலன் மனுக்கள் மீது, நீதிமன்றம் இன்று, இவ்வாறு உத்தரவிட்டது. கள்ளக்குறிச்சியில் கடந்த ஜூன் மாதம், விஷச் சாராயம் அருந்தியதால் 66 பேர் பலியானது பற்றிய வழக்கை, இதுவரை, சிபி-சிஐடி விசாரித்து வந்தது. இதற்கிடையே, தமிழ்நாடு சட்டத் துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி இன்று சென்னையில், செய்தியாளர்களிடம் பேசுகையில், சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பு மீது, மேல்முறையீடு செய்வது குறித்து, முதலமைச்சரிடம் கலந்து ஆலோசிக்கப்படும் என்று கூறினார்.

---------------------------

*தங்கத் தேர்* (10)

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், இன்று, பெத்து செட்டிபேட் சித்தி விநாயகர் – சிவசுப்ரமணியர் கோவிலில், தங்கத் தேர் செய்யும் பணிகளை தொடக்கி வைத்தார். தொடர்ந்து ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு பூஜையில் அவர் கலந்து கொண்டு தரிசனம் செய்தார். துணை நிலை ஆளுநருக்கு, ஆலய நிர்வாகம் சார்பில், பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் திரு.வைத்தியநாதன் மற்றும் கோவில் நிர்வாகிகள் உடன் இருந்தனர். சித்தி விநாயகர் சிவசுப்ரமணியர் கோவிலில், 12.5 அடி உயரம் உள்ள தங்கத் தேர், 4.8 கிலோ தங்கத்தை பயன்படுத்தி, சுமார் 4 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட உள்ளது.

---------------------------

ஏனாம்-வேளாண்மை (10)

புதுச்சேரி அரசின் வேளாண் துறை இயக்குநர் திரு. வசந்தகுமார் இன்று ஏனாமில், விவசாயிகள் கூட்டம் ஒன்றை நடத்தி, தென்னை விவசாயத்தில், ஒருங்கிணைந்த பூச்சி, மற்றும் நோய் கட்டுபாடு குறித்த, வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை ஏஜென்சியின் திட்டம் குறித்து பேசினார். ஃபிரமோன் வேதிப் பொருளை பயன்படுத்தி, பூச்சிகளை பிடிப்பதற்கான பொறிகளையும் விவசாயிகளுக்கு அவர் வழங்கினார். விவசாயிகளுக்கு தேவையான வேப்பம் பிண்ணாக்கு, மற்றும் உயிரி இடுபொருட்களும், விதை நெல்லும் மானிய விலையில் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார். ஏனாம் பகுதிக்கான வேளாண் துறை துணை இயக்குநர் டாக்டர் சிவசுப்ரமணியம் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

---------------------------

வானிலை (19)

தென்கிழக்கு வங்கக் கடலில், வரும் 23ஆம் தேதி வாக்கில், காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்றும், அதற்கு அடுத்த 2 நாட்களில், இது, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, தென்மேற்கு வங்கக் கடலில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுஅல்லாது, குமரிக் கடல், மற்றும், தென்கிழக்கு அரபிக் கடல் பகுதியிலும், 2 வளிமண்டல கீழடுக்கு சுழற்சிகள் நிலவுகின்றன. இதன் காரணமாக, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், தஞ்சை, மயிலாடுதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில், கனமழைக்கும், நாகை, திருவாரூர், நெல்லை, குமரி மாவட்டங்கள், மற்றும், காரைக்கால் பகுதியில், மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. மீனவர்கள் இன்றைய தினம், மன்னார் வளைகுடா, மற்றும் அதனை ஒட்டிய தென் தமிழக கடலோரப் பகுதிகளுக்கும், நாளை முதல், வங்கக் கடல் பகுதிகளுக்கும் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர். இதற்கிடையே, தென் தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமாக இருப்பதால், கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, நெல்லை மாவட்ட நாலுமுக்கு பகுதியில், 17 செ.மீ மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில், 5 செ.மீ மழை பெய்துள்ளது.

---------------------------

காப் மாநாடு (14)

பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு ஏற்ப, மாற்றம் கொண்டு வருவதில், வளரும் நாடுகளின் நிதித் தேவைகளுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பான உறுதிமொழிகளை, வளரும் நாடுகள் நிறைவேற்ற வேண்டும் என, இந்தியா, வலியுறுத்தி உள்ளது. அஜர்பைஜான் தலைநகர் பாகு-வில் நடைபெறும் பருவநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா உச்சி மாநாட்டின் காப்-29 அமர்வில்,

இந்தியா வெளியிட்ட அறிக்கையில், இவ்வாறு வலியுறுத்தப் பட்டுள்ளது. வளர்ந்த நாடுகள், கடந்த காலத்தில் வெளியிட்ட கார்பன் புகை காரணமாகவே, வளரும் நாடுகள் தற்போது, பருவநிலை மாற்றத்தால் பாதிக்கப் பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வளரும் நாடுகளில் மக்களின் வாழ்க்கையும், வாழ்வாதாரமும் பாதிக்கப் பட்டுள்ளதால், வளரும் நாடுகளுக்கு போதிய நிதி ஆதாரங்கள் வழங்கப்பட அவசரத் தேவை இருப்பதாகவும், நிதி விடுவிப்பதில் கடுமையான விதிமுறைகள், மற்றும், சிக்கலான ஒப்புதல் நடைமுறைகளை தவிர்த்து, தாமதங்களை குறைத்தல் அவசியம் என்றும் இந்தியா வலியுறுத்தி உள்ளது.

---------------------------

*முர்மு (6)*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாளை முதல் தெலங்கானா மாநிலத்திற்கு 2 நாள் பயணம் மேற்கொள்கிறார். நாளை ஹைதராபாத்தில் நடைபெற உள்ள கோடி தீபோற்சவத்தில், அவர் கலந்து கொள்கிறார். நாளை மறுநாள் ஹைதராபாத்தில், இந்தியக் கலாச்சாரம், மற்றும் பாரம்பரிய கலைகளின் ஒருமுகத் தன்மையை கொண்டாடுவதற்கான லோக் மந்தன் விழாவில், குடியரசுத் தலைவர் தொடக்க உரையாற்றுகிறார்.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மாலை, கயானா தலைநகர் ஜார்ஜ்டவுனில், அந்நாட்டின் அதிபர் டாக்டர் முகமது இர்ஃபான் அலியை சந்தித்து பேசுகிறார்.

இந்தியாவின் படைப்புத் திறன்சார் பொருளாதாரம், 30 பில்லியன் டாலர் தொழிலாக வளர்ச்சி அடைந்து இருப்பதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடருக்கு முன்பாக, மத்திய அரசு வரும் 24ஆம் தேதி, அனைத்துக் கட்சி கூட்டம் ஒன்றை நடத்த உள்ளது.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், இன்று, பெத்து செட்டிபேட் சித்தி விநாயகர் – சிவசுப்ரமணியர் கோவிலில், தங்கத் தேர் செய்யும் பணிகளை தொடக்கி வைத்தார்.